Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC 325/2022 PW-1**

Name : பாலு
Father / Husband name : கோவிந்தசாமி
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.12.2024

**Accused Present.**

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

எனது அப்பாவிற்கும் எதிரியின் கணவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது அப்பாவும் தற்போது நல்லமுறையில் தான் பேசிக்கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். எதிரியின் கணவர் ராஜ்குமார் எனது அப்பாவிடம் 2017 ம் ஆண்டில் ரூ.1,50,000/- பணம் கடனாக வாங்கியிருந்தார் என்றால் என்னிடம் தான் 2018 ம் ஆண்டு எதிரியின் கணவர் ரூ.1,50,000/- கடன் வாங்கினார். நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பானார் கேட்டுக்கொண்டதால் எதிரியிடம் காசோலை மற்றும் எதிரியின் கணவரின் காசோலையை கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது, என்னிடம் வாங்கிய பணத்திற்கு என்னிடம் காசோலை கொடுத்தார். நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் வங்கியிலிருந்து மாற்றம் செய்தேன். 16.05.2018 ம் தேதி எதிரி கொடுத்திருந்த 175596 என்ற எண் கொண்ட காசோலையை வங்கியில் வசூலுக்காக செலுத்தி ரூ.1,50,000/- ஐ எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. பின்னிட்டு 175595 என்ற எண் கொண்ட மற்றொரு காசோலையை ரூ.1,00,000/- ஐ எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. வட்டியும் அசலுடன் சேர்த்து ரூ.2,50,000/- ஐ மேற்படி காசோலையின் மூலம் பைசல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு எனில் எனது அப்பாவின் வங்கி கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது அப்பாவிடம் கேட்டு வாங்கிகொடுக்கிறேன். எனது அப்பாவிடம் வங்கி கணக்கு பட்டியலை சமர்பித்தால் உண்மை தெரியவரும் என்று நான் பயப்படுகிறேன் என்றால் சரியல்ல.

அந்த நேரத்தில் எதிரியின் கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் ஜாமீனுக்காக கொடுக்கப்பட்ட காசோலையை திருப்பி வாங்க முடியாமல் போனது என்றால் சரியல்ல. பின்னிட்டு எதிரியின் கணவர் இறந்த விவரம் தெரியுமா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு எங்களுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த வழக்கு காசோலை மட்டும் இல்லாமல், இன்னும் பலக்காசோலைகளை எனது அப்பாவிடமிருந்து சூது மார்க்கமாக வாங்கிக்கொண்டு எதிரியை அலைக்கழித்து, மறுபயன் எதுவும் இல்லாத காசோலையை வைத்து வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் கள்ளக்குறிச்சியில் தாக்கல் செய்த காசோலை வழக்கை எந்த முகாந்திரமும் இல்லாமல் திண்டிவனம் நீதிமன்றத்திற்கு மாற்றியிருக்கிறது என்றால் நான் மாற்றவில்லை, நீதிபதியால் உத்தரவிடபட்டு மாற்றப்பட்டது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தனியார் கம்பெனியில் அக்கவுன்ட்ன்டாக இருக்கிறேன், விவசாயமும் செய்கிறேன். எனது வரவு செலுவுகளை தனியாக தான் செய்கிறேன், வங்கி கணக்கு மூலம் செய்வதில்லை என்றால் எனக்கு எனது நிறுவனத்தில் எனது சம்பளத்தை கையில் பணமாக தான் தருவார்கள். எதிரிக்கு கொடுத்த தொகை வங்கி கணக்கு மூலம் கொடுக்கப்பட்டதா அல்லது நேரடியாக கொடுக்கப்பட்டதா என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ கூறவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த காலத்திலும் எந்த பணமும் வாங்கவில்லை, காசோலையும் கொடுக்கவில்லை, எனது அப்பாவிடம் கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எந்த காலத்திலும் என்னை நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்டது சம்மந்தமாக எதிரியிடம் சொல்லும்போது 11.10.2018 திருப்பப்பட்ட விவரத்தை நான் அவரிடம் சொன்னதாகவும், எதிரி 20 நாட்கள் கழித்து காசோலையை தாக்கல் செய்யுமாறு சொல்லியுள்ள அம்சங்கள் உண்மையல்ல, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் நேரடியாகவோ, தொலைபேசியிலோ இதுநாள் வரையில் பேசவில்லை என்றால் பேசியிருக்கிறார், தொலைபேசியின் வாயிலாக பேசியிருக்கிறார். நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்னர் என்னை

பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் எதிரிக்கு கொடுத்த அறிவிப்பில் எதிரியின் முகவரியை கூட தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2018 ல் ஆகஸ்ட் முதல் வாரத்தில் நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வதற்கும், அதற்கு அவர் காசோலை கொடுத்ததாக சொல்லுவதும் உண்மை அல்ல என்றால் சரியல்ல. எதிரி அவ்வாறு எந்த தொகையும் என்னிடம் வாங்கவில்லை, எதிரியின் கணவர் எனது அப்பாவிடம் கொடுத்த காசோலையை பயன்படுத்தி நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.